

மறைந்த முன்னாள் தென்சென்னை மாவட்ட அவைத் தலைவர் சு.ஜம்புலிங்கம் நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு, சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலையணிவித்து மரியாதை செலுத்தி, அன்னாரது நினைவிடம் வரை அமைதி ஊர்வலம் சென்று மலரஞ்சலி செலுத்தினார். உடன் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தகரணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.முருகேசன், எஸ்.டி. தங்கராஜ், பகுதி நிர்வாகிகள் எஸ்.உமாபதி, களக்காடி எல்லப்பன், அஜந்தா ரவி, வாட்டர் விஜி, அ. பாபு, தியாகு, வட்ட செயலாளர்கள் மு.அன்பழகன், இரா.செழியன், புக்கடை ஆர்.பழனிச்சாமி, பி.கே. குமார், சோ.செந்தில்குமார், அ.கதிரேசன், சதீஷ்கண்ணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் தம்பி ஆர்.சசிகுமார், மாவட்ட மகளீரணி அமைப்பாளர் சகோதரி கனிமொழி தனசேகரன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்!

# கடத்தல் - பதுக்கல் தொடர்பாக புகார் தெரிவிக்கலாம்!

## உணவுப் பொருள் வழங்கல் - நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவிப்பு!

சென்னை, அக்.18

அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டம் / சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடுவோர் / உடந்தையாக செயல்படுவோர் மீது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம், 1980ன் படி அவ்வப்போது தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 01.09.2023 முதல் 30.09.2023 வரையிலான ஒரு மாத காலத்தில் கள்ளச்சந்தையில் விற்பதற்காக கடத்த முயன்ற, ரூ61,25,763/ (ரூபாய் அறுபத்தொரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்று மட்டும்) மதிப்புள்ள 4,111 குவிண்டால் பொது விநியோகத்திட்ட அரிசி, 151 எரிவாயு உருளைகள், 747 கிலோ கோதுமை, 186 கிலோ துவரம்பருப்பு, 1,481 லிட்டர் மண்ணெண்ணெய், 3 பாக்கெட் பாமாயில், சர்க்கரை 37 கிலோ ஆகியவையும், மேற்கண்ட கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 158 வாகனங்களும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன.

குற்றச்செயலில் ஈடுபட்ட 748 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக பொதுமக்கள் 1800 599 5950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

### மு.க.தமிழரசு - அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வாழ்த்து

# பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் கே.கே.மோகன் இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, அக். 18-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் கன்னிகாபுரம் கே.கே.மோகன் இல்ல மணவிழா மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் மு.க.தமிழரசு மற்றும் அமைச்சர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்திற்குட்பட்ட கன்னிகாபுரம் கே. கே.மோகன் - மரகதம் ஆகியோரின் மகனும், சின்ன காஞ்சிபுரம் திரௌபதி நகர் கிருஷ்ணமூர்த்தி - நிர்மலா ஆகியோரது மகள் கே.தீபிகா ஆகியோரது மணவிழா இன்று (18.10.2023 புதன்கிழமை) காலை 6 மணி அளவில் வடபழனி முருகன் கோவிலில் நடைபெறுகிறது.

வரவேற்பு நிகழ்ச்சி இன்று (18.10.2023 புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு வேளச்சேரி மோகனா கன்வெண்ஷன் சென்டரில் மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகி



யோரது நல்வாழ்த்துக்களுடன், மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் (மண்டலக் குழுத் தலைவர்), எம்.கிருஷ்ணமூர்த்தி (மண்டலக் குழுத் தலைவர்), கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் ஐ.கென்னடி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.செந்தில், எஸ். பாட்சா, சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு, வழக்கறிஞர் ரமேஷ்குமார், சி.வெல்வராஜ், ஆ.தேவக்குமாரன், ஏ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, எஸ்.ராமச்சந்திரன், எஸ். அசோக்குமார், கே.என். செழியன், எஸ். லிங்கப்பன், எஸ்.ஜெயராமன், டி.குமரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மு.க.தமிழரசு, அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆர். எஸ். ராஜகண்ணப்பன், பெ.கீதாஜீவன், டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், கழகவர்த்தகர் அணிச் செயலாளர் காசிமுத்துமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, எஸ். அம்பேத்குமார், அசன் மௌலானா, மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் க.தனசேகரன், மாணவர் அணி எஸ்.மோகன் உள்ளிட்ட கழக முன்னணியினர், நிர்வாகிகள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், எஸ். பாஸ்கரன், மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், சைதை சம்பத் மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார், வே.ஆனந்தம், எஸ். முருகவேல், கே.என். தாமோதரன், பகுதிச் செயலாளர்கள் துரைகபிலன், அரிமா சு.சேகர், கே.கண்ணன், மு.இராசா, எஸ். வி.ரவிச்சந்திரன். வி.இ.மதியழகன், நொளம்பூர் வே. ராஜன், துரைவீரமணி, வி.வெங்கடேசன்,

பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, எல்லப்பன், த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சைதை சாதிக், வழக்கறிஞர் த.பாபு, ஆர். கிருஷ்ணகுமார், கோல்டு பிரகாஷ், எ.கௌதமன், மு.பலராமன், மோ.எழில், ஆர்.மணிகண்டன், இரா. மலர்விழி மற்றும்

நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், சைதை மு.இராஜா, க. மணி, கோட்டூர்புரம் கோ.சண்முகம், சை.மு. சேகர், ந.தமிழரசு, கோதண்டம், நாகா, அட்கோ கமலநாதன், மாவட்டப் பிரதிநிதி வே.முருகன், ஆர்.ரவிமூர்த்தி, எம்.முருகன், க.உமாபதி, வி.யோவான், டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், எஸ். ரவி, இரா.சுதாபிரியன், பாபு, மு.மகேஷ், லாரன்ஸ் மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

ஆர். ராஜ்பிரசாத், பி. திலிப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### திருநின்றவூரில் அரசு தொடக்கப்பள்ளியில்

# காலை உணவுத் திட்டத்தை ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஆய்வு!

திருவள்ளூர் அக் 18;

தமிழ்நாடு அரசின் காலை உணவு திட்டம் நடைமுறைப்படுத்தி அனைத்து தொடக்க பள்ளிகளிலும் செயல்ப்படுத்தப்பட்டுள்ளது.. இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் கோமதிபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. காலை உணவு திட்டத்தை தரம் மற்றும் தயாரிக்கும் முறைகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்த அவர், காலை உணவு திட்ட ஆய்வு குறித்து படிவம் பூர்த்தி செய்தார். இதனை தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறையை ஆய்வு மேற்கொண்டார் அதோடு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி தர ஆசிரியர்கள் கோரிக்கையை சட்டமன்ற நிதியில் கட்டித்தருவதாக உறுதியளித்துள்ளார்

இதனை தொடர்ந்து பேசியா அவர் நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை சிலருடைய குடும்ப வறுமை யின் சூழ்நிலையை காரணமாக குழந்தைகள் காலை உணவு உண்டுவதில்லை நிலையை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தொடங்கப்பட்ட நாள்முதல், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, நல்ல பயன் அளித்து வருகிறது. சிறப்பு வாய்ந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாட்டு மக்களிடையே மட்டுமின்றி, பிற மாநில மக்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி பெரும் வரவேற்பு உள்ளது.

அது மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே காலை உணவு சிற்றுண்டி வழங்கிய ஒரே முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான்எனதெரிவித்தார் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், மாவட்ட பொருளாளர் நரேஷ் குமார், நகர் மன்ற துணைத் தலைவர் சரளா நாகராஜ், நகராட்சி பொறியாளர் ருத்ரகோட்டி, தலைமை ஆசிரியர் அஞ்சலிதேவி , நகர கழக நிர்வாகிகள் ஜெ.அன்பழகன் நாகராஜ் எஸ்.கமலக்கண்ணன் பாபு, ஆர்.ரவி, குணசேகரன், நகர் மன்ற உறுப்பினர்கள் வட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் தங்கராஜ், தி.தெ. பாபு, பி.எல்.ஆர்.தேவி யோகா, ஜீவானந்தன், ஜெயக்குமார், கோபால், சலீம், முரளி, சந்தோஷ் குமார், மகேஷ்குமார், உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியளவில்

# கலைஞர் நூற்றாண்டு விழா மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

## டாக்டர்எ.வ.வே.கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பரிசளித்தனர்!

திருவண்ணாமலை, அக். 19 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப்போட்டி திருவண்ணாமலையில் நடைபெற்றது. திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியினை டாக்டர் எ.வ.வே. கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்றும், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப் போட்டி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு, கலசப்பாக்கம், செங்கம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரிய போட்டிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து...

16.10.2023 திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொறியியல் கல்லூரி, தொழிற்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

பேச்சுப்போட்டிக்கு பொறியாளர்அணி மாவட்ட அமைப்பாளர் சி.ராம்காந்த் தலைமை வகித்தார்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ச.பிரகாஷ், மு.தினேஷ்பாபு, த. ரகுபதி, தா.சண்முகம், டி. என்.பி.வினோத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் அ.மோகன்ராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பேச்சுப்போட்டியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். கலந்து கொண்ட மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி வாழ்த்தி பேசினார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணை செயலாளரும் செங்கம் சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ. கிரி ஆகியோர் மாணவர்களை வாழ்த்தி பேசினர்.

“ ‘தொழில்நுட்ப கல்விக்குத் தோள்கொடுத்த கலைஞர்’, தொழில்துறையை உயர்த்திய தமிழினத் தலைவர்’, திராவிட மாடலும் திறன்மிக்கக் கல்வியும்’, தெற்குச்சூரியன்’, கலைஞரும் தமிழும்’” ஆகிய ஐந்து தலைப்புகளில் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது.

பேச்சுப்போட்டியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனுசு, ஜெ.மெய்கண்டன், ஏ.டபள்யு.சர்க்கார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, பெ. கோவிந்தன், த.செந்தில்குமார், இரா.ராஜேந்திரன், பேரூர் செயலாளர் மு.அன்பழகன், பொதுக்குழு உறுப்பிர் க.பிரபாகரன், மோட்டூர் பாலு, ஒன்றியக்குழுத் தலைவர் தமயந்திஏழுமலை, மாவட்ட துணை அமைப்பாளர் டி. எம்.கலையரசன், நகர துணை செயலாளர் வட்டி அருணாசலம், ஆ.தே.முருகையன், ஆர்.வெங்கடேஷ் மற்றும் பேச்சுப்போட்டியில் இளங்கலை, முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், தொழிற்பயிற்சி மைய மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பேச்சுப்போட்டியின் நடுவர்களாக பேச்சருவி கு. சபரி, பேராசிரியர் சு.பிரேம்குமார், பேராசிரியர் கு. லட்சுமி, அஜ்மல் (எ) முத்தமிழன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியினை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன் தொகுத்து வழங்கினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகளும், சிற்றுண்டி மற்றும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சட்டமன்ற அளவில் முதல் பரிசு ரூ.10,000/மும், இரண்டாவது பரிசு ரூ.5,000/மும், மூன்றாவது பரிசு ரூ.3,000/மும் வழங்கப்படவுள்ளது. சட்டமன்றத் தொகுதியளவில் வெற்றி பெறும் போட்டியாளர்கள், மண்டல அளவிலான போட்டிகளுக்கும், மண்டல அளவில் வெற்றிபெறும் போட்டியாளர்கள் மாநில அளவிலான போட்டிகளுக்கும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இறுதிச் சுற்றில் வெல்பவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்திருக்கரங்களால் ரூ.5 இலட்சம் பரிசும், சுழற்கோப்பையும் பெறுவார்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் து.மணியரசு நன்றி கூறினார்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.

### ஏழை, எளியோர் நலன் காப்பதில்

# இந்தியாவிற்கே முன்னோடியாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, அக்.18-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் வருவாய் துறையின் சார்பில் 59விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை அமைச்சர் எஸ்.ரகுபதி 13.10.2023 அன்று வழங்கினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளியோர் நலன் காப்பதில் ஏராளமான நலத்திட்டங்களை இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்றால் அது மிகையல்ல. இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. அதன்படி, வருவாய் துறையின் சார்பில், விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், அவர்களின் நீண்ட கால கனவினை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் விளிம்பு நிலையில் உள்ள 59 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளிகளுக்கு விலையில்லா வீடுகள் கட்டி தருவதற்கு உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.எனவே பொதுமக்கள், அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ)சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமை!

# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், அக்.18-

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.பாண்டியன், ஜி.எஸ். அரசு, மலர் விழிலோகநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், செயற்குழு உறுப்பினர் ஏ.ஜி.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் வீ.தயாநிதி, எஸ்.கதிரேசன், ஜி.ரமேஷ், மா.ப.அன்புநிதி, சி.சந்திரசேகரன், ஏ.ஆர். முன்னாஷெரீப், மாநில நிர்வாகிகள் சி.ஞானசேகரன், என்.சுப்பிரமணி,சேர்க்காடு கென்னடி, பகுதிச் செயலாளர்கள் என்.பரமசிவம், வன்னியராஜா, எம்.ஏ. கணேஷ்சங்கர், ஆர்.பி.இ. சசிக்குமார், எஸ்.தயாள்ராஜ், வீ.ஜி.கே.சுந்தரவிஜி, ஆர்.சத்தியமூர்த்தி, ஜி.பாலமுரளி கிருஷ்ணா, சி.எம். தங்கதுரை, ஆர்.கே.ஐயப்பன், தி.அ.முனவர்

பாஷா, பி.முருகபெருமாள், வேலூர் ஒன்றியச் செயலாளர் சி.எல்.ஞானசேகரன், நகரச் செயலாளர்கள் குடியாத்தம் சவுந்தர்ராஜன், பேர்ணாம் பட்டு ஆலியார்ஜுபேர் அகமது, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சரவணன், சி.ரவி, எஸ். தணிகாசலம், கே.கருணாகரன் ஆர்.முருகேசன், கே. சீதாராமன் என்.இ.சத்யானந்தம் பிரதீஷ், குமாரபாண்டியன், பி.வெங்கடேசன், கே.ஜனார்த்தனன், கஜேந்திரன், அன்பரசன் முருகன், பேரூர் செயலாளர்கள் பி.எம்.ஜாகிர் உசேன், பெருமாள் ராஜா, கே.நேரு, அருள் நாதன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.ராஜமார்த்தாண்டன், ச.பரிமளம் கே.ஆர்.அசோக், வாசுகி, எம்.மஞ்சுளா எம்.இ. கோவிந்தராஜ், பி. லோகநாதன் மாநில சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் எம். நூருல்லா, மாவட்ட அமைப்பாளர் தௌபீக் அகமது மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாடாளுமன்ற தகவல் தொழில் நுட்ப நிலைக்குழு பெங்களூரில் கர்நாடக மாநில ”விதான் சவுதா” சட்டசபையில் தகவல் தொழில் நுட்ப மேலாண்மை செயல்படுவது மற்றும் அரசு துறைகள், வங்கிகளில் செயல்படும் விதம் குறித்து ஆய்வு மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டம் எட்டாவது அட்டவனையில் உள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்பு ஆய்வுகள் குறித்து விரிவான ஆய்வினை நிலைக்குழு தலைவர் ஆம் ஆத்மி கட்சியின் முன்னணி தலைவர் நாராயண தாஸ் குப்தா தலைமையில், கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிராஜன் உள்ளிட்ட நிலைக்குழு உறுப்பினர்கள் கர்நாடக மாநில சட்டமன்ற செயலாளர், மாநில தகவல் தொழில்நுட்ப துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு வங்கிகளின் உயர் அதிகாரிகளுடன் கலந்தாய்வு செய்தனர்.